Cr.M.P. 621/2024
நாள்.07. 10.2024
பெயர்: செந்தில்குமார்
த/பெ : மாரியப்பன்
வயது : 36
ஊர் : மருதம்பட்டி

செந்தில்குமார் ஆகிய நான் சத்தியத்தின் பேரில் கூறும் வாக்குமூலம் என்னவென்றால்

1. கடந்த 17.05.2021–ம் தேதி திருச்சி இனாம்குளத்தூரைச் சேர்ந்த காத்தமுத்து என்ற சேட்டுவின் மகள் சீதாலெட்சுமியை திருமணம் செய்தேன். திருமணத்திற்கு செய்து 9 நாட்களிலேயே எனது மனைவியை அவரது உறவினர்கள், மற்றும் ஊர்க்காரர் அழைத்து சென்று விட்டனர். பின்னர் சமாதானம் பேசி, மீண்டும் என்னுடன் வந்து வாழ்ந்து கொண்டிருந்தார். பிறகு எனது மனைவி காரணமே இல்லாமல் தற்கொலை முயற்சி 4,5 முறை செய்தார். திருமணம் ஆகி மூன்றாவது மாதத்தில் ஒரு முறை எறும்பு சாக்பீசை சாப்பிட்டு தற்கொலை முயற்சி செய்து இலுப்பூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று பின்பு நான் வரதட்சணை கொடுமை செய்வதாக கீரனூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொத்துள்ளார்.

2. அங்கு சமாதாகம் பேசி மீண்டும் எனது மனைவியை அழைத்து வந்து 5 நாட்களிலேயே அம்மா வீட்டிற்கு சென்று விட்டார். மீண்டும் 4 மாதம் கழித்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டார். இது போன்று அடிக்கடி காவல் நிலையத்தில புகார் கொடுத்து எனக்கு மன உளைச்சலை ஏற்படுத்தினார்.

3. கடந்த 07.07.2024 அன்று மாலை 6.00 முதல் 6.30 மணியளவில் மருதம்பட்டியில் கிராமம், இலுப்பூரில் உள்ள எனது வீட்டில் நான் படுத்திருந்த போது இளங்கோவன், முருகேசன், மூக்கன் என்ற காத்தமுத்து, ஜெகதீஷ் , சேட்டு என்ற காத்தமுத்து, சிவா, முத்து லெட்சுமி, தெய்வானை, சித்ரா , சீத்த லெட்சுமி ஆகியோர்கள் எனது வீட்டிற்கு வந்து இவனை அடித்து கொல்லுங்கடா என சொல்லிக் கொண்டு இருக்கும் போது முருகேசன் என்பவர் நீளமான கொம்பால் எனது வலது தலையிலும், இளங்கோவன் என்பவர் கட்டையால் இடது தலையிலும், ஜெகதீசன் , மூக்கன் என்ற காத்தமுத்து ஆகியோர்கள் குச்சியால் உச்சந்தலையில் அடித்தார்கள்.

4. நான் கீழே விழுந்து விட்டேன், பெண்கள் அனைவரும் காலால் மிதித்து , குச்சியால் அடித்தார்கள். என்னை தேவுடியா பயலே என்று

சொல்லி இத்துடன் தொலைந்த போடா எனக் கூறினார்கள். நான் மயக்கம் போட்டியிருந்தேன். பிறகுக 10,15 நிமிடம் கழித்து எழுந்து வெளியே வந்த போது இளங்கோவன்,முருகேசன், ஜெகதீஷ் ஆகியோர்கள் ஆயுதங்களை வைத்து கொண்டு இந்த வழியில் எப்போது வந்தாலும், என்னையும், எனது அம்மாவையும் கொலை செய்து விடுவதாக மிரட்டினார்கள்.

5. பிறகு, எனது மாமா முருகேசன் 108 ஆம்புலன்சை வரவழைத்து என்னை இலுப்பூர் அரசு மருத்துவமனைக்கு எனது அம்மாவுடன் அனுப்பி வைத்தார். அங்கு முதலுதவி சிகிச்சை எடுத்த பின்பு புதுக்கோட்டை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். 08.07.2024– ம் தேதி அன்னவாசல் காவல் நிலையத்தில் நான்புகார் கொடுத்த பின்பு புதுக்கோட்டைக்கு சென்றேன். புகாரின் பேரில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.